ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2326/51 - 2023 අප්‍රේල් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.04.06**

2326/51 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர்பு இல.: RAT/LAN/10/F1/07.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில் தெஹிவளை கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லையில் இலக்கம் 546 B, விஹார கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இல. 521003/09/46/1 மற்றும் 2022.10.05 ஆந் திகதியுடைய காணித்துண்டு வரைபடத்தின் துண்டு இல. 207 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்திலிருந்து 0.0275 ஹெக்டயார் கீழே விபரிக்கப்பட்டுள்ள காணிப்பகுதி.

**1. துண்டு இல. 207**

காணியின் பெயர்: புலுகஹவத்த, மதிப்பீட்டு வரி இலக்கம் 129/8, ரஜமாவத; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: சத்கோரலகே நந்த திசாநாயக மற்றும் சத்கோரலகே சரத் திசாநாயக; விஸ்தீரணம்: 0.0275 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி

மு.ப. 10.30 மணிக்கு இலக்கம் 175, காலி வீதி, இரத்மலானை இல் அமைந்துள்ள பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். ஆர். ஹிமாலி கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
இரத்மலானை.

பிரதேச செயலகம்,
175, காலி வீதி, இரத்மலானை,
2023, ஏப்பிறல் 01.

EOG 04 - 0067